MINUTES OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. MSH BLUE METAL, OVER AN EXTENT OF 1.98.0 HA AT S.F.NOS. 102/1, 102/2, 102/3, 102/4, 102/5, 102/6A, 102/6B, 102/7A, 102/7B, 102/7C, 103/3A, 103/3B, 103/4, 103/5A, 103/5B, 103/5C, 103/5D, 103/6A, 103/6B & 103/7, MANGALAM VILLAGE, CHEYYAR TALUK, TIRUVANNAMALAI DISTRICT ON 26.02.2026 AT 12.00 NOON AT M/S. JAITHRI KALYANA MANDAPAM, CHOLAVARAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.

Present:

1	Selvi.L. Ambica Jain I.A.S.,	:	Sub Collector, Cheyyar division Tiruvannamalai. (Representative of the District Collector, Tiruvannamalai)
2	Er. A. Jothi Prakash	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
3	Dr. S. Sugashini	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
4	Er. K. Prem Kumar	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.
5	Thiru. N. Ashok Kumar	:	Tahsildar, Cheyyar Taluk, Tiruvannamalai.
6	Thiru. S. Silambarasan	:	Sub-Inspector of Police, Dusi Police Station, Tiruvannamalai.
7	Thiru.K. Vijayaraghavan	:	Environmental Impact Assessment (EIA) Consultant, M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri.
8	Tmt. A. Sulokshana	:	Village Assistant, Palli Village, Cheyyar Taluk, Tiruvannamalai
9	Thiru.V. Thanigaimalai	:	Village Assistant, Mangalam Village, Cheyyar Taluk, Tiruvannamalai.
10	Public	:	66 Nos. (Attendance enclosed as Annexure).

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, welcomed the Sub Collector, Cheyyar division, Tiruvannamalai, the general public, Revenue officials, Police department officials, Media persons and the proprietor of M/s. MSH Blue Metal, Rough Stone and Gravel Quarry who had assembled for the public hearing in connection with obtaining Environmental Clearance for the proposed Rough Stone and Gravel Quarry of M/s. MSH Blue Metal. He further pointed out that prior notification regarding the conduct of this public hearing had already been published on 22.01.2026 in the Tamil and English daily newspapers, namely "Dinathanthi" and "The New Indian Express." He also informed that public announcements had been made in and around Mangalam Village through loudspeakers and distribution of pamphlets.

He further stated that, on behalf of the proponent of the proposed Rough Stone and Gravel Quarry project, their project consultant would present a detailed explanation of the project to the public, following which the public may given their views, suggestions, doubts, and seek clarifications regarding the project, and that all such event would be video graphed and audio recorded, and the minutes and records of this meeting would be forwarded to the State Environment Impact Assessment Authority-Tamil Nadu (SEIAA-TN).

The Sub Collector, Cheyyar division, inaugurated the public hearing meeting and requested the proprietor (M/s. MSH Blue Metal), of the proposed Rough Stone and Gravel Quarry, to present the detailed explanation regarding the proposed quarry project.

Thiru.K. Vijayaraghavan, Environmental Impact Assessment Consultant of M/s. MSH Blue Metal Rough Stone and Gravel Quarry project from M/s. Geo Technical Mining Solutions, Dharmapuri, welcomed all those who had assembled for the public hearing meeting and delivered a detailed power point presentation explaining the operational aspects of the Rough Stone and Gravel Quarry project and the Environmental Management Plan to be implemented during its operation.

Following the above presentation, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, announced that the public may

express their views. He further requested that, before recording their views, the public should mention their name and their village name, before expressing their opinions.

Accordingly, the following public expressed their views and suggestions.

1.Thiru. Munirathnam, Mangal Village:

Thiru. Munirathinam conveyed his greetings, on behalf of the people of Mangalam Village, to the officials present and to the Sub Collector, Cheyyar. He stated that the proposed gravel quarry would adversely affect the inflow of water to the Mangalam Lake, which in turn would impact agricultural cultivation. He pointed out that the road infrastructure in the area is inadequate and that the roads have already been severely damaged due to the operations of the existing R.S. Crusher unit. He requested that the officials visit the site directly to understand the ground reality. He mentioned that dust has settled throughout the village and inside the wells. Even erukkan plants and other vegetation appear white due to heavy dust deposition. He further stated that even while walking in the area, dust accumulates on one's feet. He informed that 200 to 300 lorries pass through the area daily, making it difficult for two-wheelers and cars to travel. He added that a bus service which was previously operating had been discontinued, and only after representations to the MLA are two buses currently operating, that too with great difficulty. He stated that school-going children are afraid due to crusher operations and are therefore traveling to school in private vehicles. In this situation, if another gravel quarry is permitted, it would become extremely difficult for the residents of Mettu-theru and Mangalam areas to enter and exit the village. He therefore requested that officials conduct a direct site inspection before granting any permission. He also stated that 40 personals have already submitted petitions along with their Aadhaar numbers and requested that the same be duly examined and appropriate action be taken on behalf of the village residents.

2. Thiru. Ramamoorthy, Mangalam Village:

Thiru. Ramamoorthy conveyed his greetings to the Sub collector, cheyyar

who presided over the meeting, to the District Environmental Officer, and to the people of Mangalam Village. He stated that a quarry is already functioning in the village and that due to the operations of the R.S.K. Crusher, the entire village is covered in a cloud of dust. He mentioned that the people are already suffering as permission had been granted for an earlier quarry, and that even the drinking water appears white in colour. He further stated that if permission is granted for this quarry, vibrations would cause cracks in the houses. He questioned whether there is any legal provision to prevent the granting of such permission and asked whether there is no section in the law under which permission can be denied. He stated that they are requesting that permission should not be granted. He alleged that politicians give money and ask for permission to be granted, and that officials grant permission accordingly. He added that it is the general public who ultimately suffer due to this. He asked, "We do not know what to do?; should we vacate the village and leave?" He remarked that crushers may be established throughout the village; politicians may need money, but can they eat money? Only if paddy is cultivated can rice be eaten. He stated that this is how the current situation is unfolding. He reiterated that permission should not be granted for this quarry.

3. Thiru. Damodharan, Mangalam Village:

Thiru. Damodharan stated that they have already submitted petitions to the District Collector and the Tahsildar; however, no action has been taken so far. He informed that a petition has been submitted again today. He pointed out that there is not even a 10-meter distance between the proposed quarry site and the village road. He stated that the area is a water catchment zone: where water is present throughout, and questioned how permission could be granted for a quarry in such a location? So, he requested that officials conduct a direct site inspection to examine whether the location is suitable for establishing a quarry? He emphasized that water flows from that area to the lake and reiterated that it is a water catchment area, urging officials to inspect the site in person. He stated, "If you intend to drive us out of the village, then do so; we will leave." He mentioned that when blasting takes place in the quarry, houses experience vibrations. He also noted that there is a

cremation ground nearby and that due to poor road conditions, it is difficult to approach. He added that the village road has already been damaged due to permission granted earlier for a crusher unit. He stated that while they attempt to stop the lorries during the night; but the lorries are being operated at night instead of during the day. He further stated that despite repeatedly submitting petitions to the Tahsildar, Revenue Department officials, and the District Collector, no action has been taken to date. Nevertheless, lorries continue to operate during night hours. He also mentioned that the same complaint that was submitted during the direct grievance camp held at the Palli village is being resubmitted now, and yet no action has been taken so far. He alleged that outsiders are expressing support for the proposed quarry, whereas the villagers are submitting their Aadhaar cards to register their opposition. He criticized that permission is being granted based on the support expressed by outsiders. Finally, he requested that their petitions be considered with due respect and that permission should not be granted for the proposed quarry.

4. Thiru. Bhuvaneshwaran, Mangalam Village:

Thiru. Bhuvaneswaran stated that they are living in a very backward area, consisting of only 20 houses, and that none of these 20 households has a stable livelihood. He mentioned that they depend entirely on agriculture for their survival; however, that agricultural land is being excavated. In such a situation, he questioned where they are expected to find daily wage work and sustain their lives. He further stated that all the residents are living below the poverty line. He stated that quarry owners claim they will address the villagers' grievances; however, it is not the responsibility of quarry owners to resolve their issues, but rather the responsibility of the Government. He added that if the Government takes action, they would accept it. He remarked that if a solution is to be provided at this meeting, then the meeting may proceed; otherwise, it may as well be concluded. He stated that petitions have already been submitted to the District Collector, but no solution has been provided so far. He said that when they attempt to block the vehicles and protest, the police intervene and stop them. He

questioned why the police are standing here? and asked whether they are receiving money? He further asked what else the authorities intend to do if not work for the welfare of the people? He stated that all the officials present belong to Tiruvannamalai District and are aware of the developments in their area, and questioned why no action has been taken despite this knowledge? He mentioned that lorries are required to travel at a speed limit of 60 km per hour, but the road in their village is not 500 feet wide and is in fact a narrow road. Despite this, lorries travel at double the permitted speed. He pointed out that the road conditions are poor. He stated that permission to operate quarries is being granted in the interest of Government revenue, but emphasized that public safety and the safety of school children must be prioritized. He remarked that planting 200 saplings is not a significant matter. He stated that you (government officials) are granting permission and they operating the quarry, but this is of no need for us. He questioned that lorries shall halt for 10 minutes before moving on? and that some drivers operate vehicles while talking on mobile phones. When questioned, "they respond that they are on the phone". He asked whether it is necessary to speak on the phone while driving in that area? He further stated that multiple petitions have been submitted to the Revenue Department officials, and video evidence has also been sent to the Village Administrative Officer (VAO); however, no action has been taken so far. He questioned whether the Government is functioning properly? whether the District Collector is administering properly? or whether the administration is being conducted after receiving money? He demanded that a clear decision be given today. He added that petitions have already been submitted and grievances have been voiced at this forum, but nothing has happened. He asked whether the priority is the stone quarry or the general public? stating that Government revenue may depend on quarry operations, but public safety is essential. He stated that the speed limit for a lorry is only 60 km per hour, and if they are able to drive within that limit, they may do so, but the safety of the public must be ensured. He said that he was not asking for money and was not asking for a job, but questioned whether the authorities could at least ensure food for the people of their village. He stated that the existing agricultural lands have

been converted into stone quarries and questioned where the villagers should go in such a situation. He added that either employment should be provided or food should be ensured for the people. He mentioned that at least 200 lorries pass through the area every day, and therefore the public must think carefully and act responsibly. He emphasized that this is an issue concerning their livelihood, and expressed his concern that if the situation continues like this, the entire Tiruvannamalai district may be flattened by quarry activities within the next five years. Finally, he stated that he was taking leave with the hope that the District Collector would take an appropriate decision on this matter.

5. Thiru. K. Thanthoni, Pallimettu Nagar:

Thiru. K. Thanthoni stated that during the presentation, the project consultant had mentioned that water would be sprinkled twice daily and that the roads would be maintained. However, he questioned whether such measures alone would be sufficient?. He pointed out that approximately 100 students pass through this area every day to school and asked whether the crusher operations would be halted at least for one hour while going to school time. He stated that in Mangalam Village, around 20,000 tons of paddy are produced per agricultural season and questioned whether the officials have conducted a direct field inspection?. He further stated that if a crusher is established in the area, the water level in the wells would decline and agricultural cultivation would not be possible. He asked, "Can all of you work in crushers? Why should a crusher come here? If they asked to 'come,' why have you come? Can you abandon the agricultural lands and go work there instead? He mentioned that officials had stated that pamphlets had been circulated in the village and questioned whether such a campaign had actually taken place? He added that earlier there were no crushers and children studied peacefully. Now, crushers are being operated at night, and during the day, the movement of lorries creates excessive noise. He stated that due to night-time crusher operations, school students are facing difficulties in studying. He expressed concern that if this situation continues, students will not be able to pursue higher education and may ultimately be forced to work in the same

crushers with spades in their hands. He requested that the officials present conduct a direct inspection to determine how many agricultural lands surround Mangalam Village? and whether they are cultivable lands or other types of land? and only thereafter grant permission. He alleged that such verification is not being carried out and that instead, a survey number is simply cited and a public hearing is conducted for formality. Finally, he urged the public to consider that their future generations will have to live in this place and to collectively record their opposition by stating "No to the Quarry."

6. Tmt. Shantha, Mangalathumedu:

Tmt. Shantha stated that they are facing severe impacts. She mentioned that lorries coming and going on three sides of their area and that they are unable to sleep peacefully at night. She stated that there are small children in her house, including two children who are speech-impaired, and that they too are unable to sleep and are suffering greatly due to the continuous movement of lorries throughout the night. She questioned how they are expected to live under such circumstances. She further stated that water is not being sprinkled properly and that dust spreads heavily in the area. Therefore, she requested that officials should visit their houses in person and inspect the situation before granting permission. She also stated that lorry drivers do not operate their vehicles responsibly; they drive at high speeds and even while talking on mobile phones and brushing their teeth. She added that they do not slow down even when children are walking on the road. She mentioned that two months ago, a lorry driver drove in such a manner that a small child was almost run over, and despite her shouting, the driver did not respond. Therefore, she requested that officials visit their village directly, assess the situation, and grant permission only after proper inspection. She also urged that appropriate measures be taken to control the speed of lorries.

After that, no representation continued from the public for providing comments.

As no members of the public came forward to continue expressing their views, the Sub Collector, Cheyyar Division, Tiruvannamalai, directed that the public hearing meeting be concluded, and accordingly, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai declared that the public hearing meeting had concluded.

Furthermore, regarding the proposed M/s. MSH Blue Metal, Rough Stone and Gravel Quarry Project, a total of 23 written petitions were received from the public, while no petitions were received directly or via email at the office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

A. [signature] 6/3/26
District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tiruvannamalai.

[signature] 6/3/26
Sub Collector,
Cheyyar Division,
Tiruvannamalai.

[signature]
District Collector,
Tiruvannamalai.

உத்தேசிக்கப்பட்ட தி/ள். MSH புளூ மெட்டல், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண்கள். 102/1, 102/2, 102/3, 102/4, 102/5, 102/6A, 102/6B, 102/7A, 102/7B, 102/7C, 103/3A, 103/3B, 103/4, 103/5A, 103/5B, 103/5C, 103/5D, 103/6A, 103/6B & 103/7 மங்கலம் கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் 1.98.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 26.02.2026 அன்று சோழவரம் கிராமம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஜெய்த்ரி திருமண மண்டபத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	செல்வி.ல.அம்பிகா ஜெயின் இ.ஆ.ப,	:	சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை. (மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களின் பிரதிநிதி)
2	திரு. அ. ஜோதி பிரகாஷ்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
3	முனைவர். சி. சுகாஷினி	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
4	திரு. க. பிரேம் குமார்	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.
5	திரு. N. அசோக் குமார்	:	வட்டாட்சியர், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை.
6	திரு. S. சிலம்பரசன்	:	காவல் சார் ஆய்வாளர், தூசி காவல் நிலையம், திருவண்ணாமலை.
7	திரு. K. விஜயராகவன்	:	சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி.
8	திருமதி. A. சுலோச்சனா	:	கிராம உதவியாளர், பல்லி கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை
9	திரு.V. தனிகைமலை	:	கிராம உதவியாளர், மங்கலம் கிராமம், செய்யாறு வட்டம், திருவண்ணாமலை
10	பொதுமக்கள்	:	66 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

தி/ள். MSH புளூ மெட்டல், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை, பொதுமக்கள், வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், பத்திரிகை நண்பர்கள் மற்றும் தி/ள். MSH புளூ மெட்டல், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினதந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 22.01.2026 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மங்கலம் கிராம சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் உரிமையாளர் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை தெரிவிக்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் – தமிழ்நாடுக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து,

உத்தேசிக்கப்பட்டுள்ள (தி/ள். MSH புளூ மெட்டல்), சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி உரிமையாளர் அவர்களை விளக்கவுரையை வழங்க அழைத்தார்.

தி/ள். MSH புளூ மெட்டல், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. K. விஜயராகவன், தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, கீழ்க்கண்ட பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

1. திரு. முனிரத்தினம், மங்கலம் கிராமம்:

திரு. முனிரத்தினம் அவர்கள் கூறுகையில்,வந்திருக்கும் அதிகாரிகளுக்கும், சார் ஆட்சியருக்கும் மங்கலம் கிராமத்தின் சார்பாக வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அமைக்கப்படவுள்ள கிராவல் குவாரி காரணமாக மங்களம் ஏரிக்கு தண்ணீர் கிடைப்பதில் பாதிப்பு ஏற்படும் என்றும், இதனால் விவசாய பயிர்கள் பாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். இப்பகுதியில் சாலை வசதி போதுமானதாக இல்லை என்றும், ஏற்கனவே செயல்பட்டு வரும் ஆர்.எஸ் கிரஷர் காரணமாக சாலைகள் மிகவும் சேதமடைந்துள்ளன என்றும் குறிப்பிட்டார். அதிகாரிகள்

நேரடியாக வந்து பார்வையிட்டால் நிலைமை தெளிவாக புரியும் என்றும் கூறினார். ஊர் முழுவதும் மற்றும் கிணறுகளில் தூசி படிந்து காணப்படுகின்றது என்றும், எருக்கன் செடிகள் உள்ளிட்ட அனைத்து செடிகளும் வெள்ளையாகத் தூசி படிந்த நிலையில் உள்ளன என்றும் தெரிவித்தார். பகுதியிலேயே நடந்து செல்லும் போது கூட கால்களில் தூசி படிகிறது என்றும் கூறினார். நாள்தோறும் 200 முதல் 300 மேற்பட்ட லாரிகள் இப்பகுதியில் இயங்குவதால், இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் செல்ல முடியாத நிலை உருவாகியுள்ளது என்றும் தெரிவித்தார். முன்பு இயக்கப்பட்ட பேருந்து சேவை பின்னர் நிறுத்தப்பட்டதாகவும், சட்டமன்ற உறுப்பினர் அவர்களிடம் கோரிக்கை வைத்ததன் பிறகு தற்போது இரண்டு பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்றும், அதுவும் மிகவும் சிரமத்துடன் இயங்குகின்றன என்றும் கூறினார். பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் கிரஷர் நடவடிக்கைகளால் அச்சம் அடைந்து, தனியார் வாகனங்கள் மூலம் பள்ளிக்குச் செல்கின்றனர் என்றும் தெரிவித்தார். இந்நிலையில் மேலும் ஒரு கிராவல் குவாரி அமைக்கப்பட்டால், மேட்டுத்தெரு மற்றும் மங்களம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு ஊருக்குள் வந்து செல்லவும் கடினமான சூழ்நிலை உருவாகும் என்றும் கவலை வெளியிட்டார். எனவே, அதிகாரிகள் மேற்கண்ட இடத்தை நேரடியாக ஆய்வு செய்த பின்னரே அனுமதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், ஏற்கனவே 40 பேர் ஆதார் எண்களுடன் கூடிய மனுக்களை சமர்ப்பித்துள்ளோம் என்றும், அவற்றை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஊர் மக்கள் சார்பாக பணிவுடன் கேட்டுக்கொண்டார்..

2. திரு. ராமமூர்த்தி, மங்கலம் கிராமம்:

திரு. ராமமூர்த்தி அவர்கள் கூறுகையில், இந்தக் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்திட வருகைபுரிந்துள்ள சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலர் அவர்களுக்கும் மற்றும் மங்களம் கிராம பொதுமக்களுக்குத் தனது வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, இவ்வூரில்

ஏற்கனவே ஒரு குவாரி செயல்பட்டு வருவதாகவும், ஆர்.எஸ்.கே கிரஷர் காரணமாக ஊர் முழுவதும் புகை மண்டலமாக உள்ளது என்றும் தெரிவித்தார். ஏற்கனவே ஒரு குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டதால் மக்கள் அவஸ்தைப்படுகின்றனர் என்றும், குடிநீர் வெள்ளையாக வருகிறது என்றும் குறிப்பிட்டார். மேலும், இக்குவாரிக்கு அனுமதி வழங்கப்பட்டால் வீடுகளில் அதிர்வுகளால் விரிசல்கள் ஏற்படும் என்றும் தெரிவித்தார். இதற்கு அனுமதி வழங்காமல் இருக்க சட்டத்தில் ஏதேனும் வழி உள்ளதா? என்று வினவினார். அனுமதி வழங்கக்கூடாது என சட்டத்தில் எந்த பிரிவும் இல்லையா? என்றும் கேள்வி எழுப்பினார். அனுமதி வழங்கக் கூடாது என கேட்கிறோம். அரசியல்வாதிகள் பணம் கொடுத்து அனுமதி வழங்கச் சொல்கிறார்கள்; அதற்கிணங்க அதிகாரிகள் அனுமதி வழங்குகின்றனர் என்று தெரிவித்தார். இதனால் பாதிக்கப்படுவது பொதுமக்களே என்றும் கூறினார். "என்ன செய்வது என்று தெரியவில்லை? ஊரை காலி செய்து போய் விடலாமா?" என்று வினவினார்? ஊர் முழுவதும் கிரஷர்கள் அமைத்துக் கொள்ளுங்கள்; அரசியல்வாதிகளுக்கு தேவை பணம், ஆனால் அரசியல்வாதியால் பணத்தை சாப்பிட முடியுமா? நெல் விளைச்சல் வந்தால்தான் அரிசியை சாப்பிட முடியும் என்ற உதாரணத்துடன் தற்போதைய நிலைமை இவ்வாறே நடைபெற்று வருகிறது என்றும் தெரிவித்தார். இக்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என தெரிவித்தார்.

3. திரு. தாமோதரன், மங்கலம் கிராமம்:

திரு. தாமோதரன் அவர்கள் கூறுகையில், நாங்கள் ஏற்கனவே சார் ஆட்சியரிடமும் மற்றும் வட்டாட்சியரிடமும் மனுக்களை வழங்கியுள்ளோம். எனினும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இன்றும் மனு வழங்கியுள்ளோம் என்றும் தெரிவித்தார். தற்போது அமைக்கப்பட உள்ள குவாரி மற்றும் எங்கள் கிராம சாலைக்கு இடையில் 10 மீட்டர் இடைவெளி கூட இல்லை என்றும் குறிப்பிட்டார். அப்பகுதி நீர்ப்பிடிப்பு பகுதியாகும்; அந்த இடங்களில் எப்போதும் தண்ணீர் இருக்கும் என்றும், அத்தகைய இடத்தில் குவாரிக்கு எவ்வாறு

அனுமதி வழங்கப்படுகிறது என்று கேள்வி எழுப்பினார். எனவே, அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டு அந்த இடம் குவாரி அமைப்பதற்கு தகுதியானதா? என்பதை பரிசீலிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அங்கிருந்தே ஏரிக்கு தண்ணீர் செல்கிறது என்றும், இது ஒரு நீர்ப்பிடிப்பு பகுதி என்பதால் நேரில் சென்று பார்வையிடுமாறு வலியுறுத்தினார். "எங்களை ஊரை விட்டு வெளியேற்ற நினைத்தால் வெளியேற்றுங்கள்; நாங்கள் வெளியேறி விடுகிறோம்" என்றும் தெரிவித்தார். குவாரியில் வெடி வெடிக்கும் போது வீடுகள் அதிர்வுறுகின்றன என்றும், அருகில் சுடுகாடு உள்ளதாகவும், சாலை வசதி சரியில்லாததால் செல்ல முடியவில்லை என்றும் குறிப்பிட்டார். ஏற்கனவே ஒரு கிரஷருக்கு அனுமதி வழங்கப்பட்டதால் கிராமத்தில் அமைக்கப்பட்ட சாலை பழுதடைந்துள்ளது என்றும் தெரிவித்தார். இரவில் லாரிகளைத் தடுக்கிறோம்; ஆனால் பகலில் இயக்காமல் இரவில் லாரிகள் இயக்கப்படுகின்றன என்றும் கூறினார். இதுகுறித்து தாசில்தார், வருவாய்த்துறை அலுவலர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு தொடர்ந்து மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இருப்பினும், இன்றளவும் இரவு நேரங்களில் லாரிகள் வந்து செல்கின்றன என்றும் கூறினார்.

மேலும், நேரடி முகாம் பல்லி கிராமத்தில் நடைபெற்றபோது அளித்த புகாரையே தற்போது மீண்டும் வழங்குகின்றோம் என்றும், இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இக்குவாரிக்கு வெளிநபர்கள் ஆதரவு தெரிவிக்கின்றனர்; ஆனால் நாங்கள் எங்கள் ஆதார் அட்டைகளை வழங்கி எதிர்ப்பு தெரிவிக்கிறோம். இக்குவாரிக்கு வெளி நபர்கள் ஆதரவு தெரிவிப்பதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்றது என்று கூறி அதனை கண்டித்தார். மேலும், எங்கள் மனுக்களை தாழ்மையுடன் பரிசீலனை செய்து இக்குவாரிக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று தெரிவித்தார்.

4. திரு. புவனேஸ்வரன், மங்கலம் கிராமம்:

திரு. புவனேஸ்வரன் அவர்கள் கூறுகையில், நாங்கள் மிகவும் பின்தங்கிய பகுதியில் வசித்து வருகிறோம்; மொத்தம் 20 வீடுகள் மட்டுமே உள்ளன என்றும், அந்த 20 வீடுகளுக்கும் நிலையான வாழ்வாதாரம் இல்லை என்றும் தெரிவித்தார். நாங்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறோம்; ஆனால் அந்த விவசாய நிலமே தோண்டி எடுக்கப்படுகிறது; இந்நிலையில் எங்கு கூலி வேலை செய்து வாழ்வது என்று கேள்வி எழுகிறது என்றும் குறிப்பிட்டார். எங்கள் மக்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கின்றனர் என்றும் தெரிவித்தார். குவாரி உரிமையாளர்கள் எங்கள் குறைகளைத் தீர்ப்பதாக கூறுகின்றனர்; ஆனால் எங்கள் குறைகளை குவாரி உரிமையாளர்கள் தீர்க்க வேண்டியதில்லை; அதனை அரசாங்கமே செய்ய வேண்டும் என்றும், அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றும் தெரிவித்தார். இந்த இடத்தில் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் என்றால் கூட்டம் நடத்துங்கள்; இல்லையெனில் கூட்டத்தை முடித்து விடுங்கள் என்றும் கூறினார். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் மனுக்கள் அளித்துள்ளோம்; இருப்பினும் இதுவரை எந்த தீர்வும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார். வண்டியை மறுக்கிறோம்; பிரச்சனைகள் செய்கிறோம்; காவல்துறையினர் வந்து தடுக்கின்றனர் என்றும், ஏன் காவல்துறையினர் இங்கு வந்து நிற்கின்றார்கள்? உங்களுக்கு பணம் வருகிறதா? என்று கேள்வி எழுப்பினார். மக்களுக்கு நன்மை செய்யாமல் வேறு என்ன செய்யப் போகிறீர்கள்? என்று வினவினார். நீங்கள் அனைவரும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்தவர்களே; எங்கள் பகுதியில் நடப்பவை குறித்து அனைத்து தகவல்களும் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. இருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ? என்று கேட்டார். லாரிகள் குறிப்பிட்ட 60 கி.மீ. வேகத்தில் தான் செல்ல வேண்டும்; எங்களிடம் 500 அடி அகலமான சாலை இல்லை, குறுகிய சாலையே உள்ளது; ஆனால் இரு மடங்கு வேகத்தில்

செல்கின்றனர். எங்கள் சாலை சரியாக இல்லை. அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்பதற்காக குவாரி இயக்க அனுமதி தருகிறார்கள். மக்கள் பாதுகாப்பைப் பாருங்கள்; பள்ளி பிள்ளைகளின் பாதுகாப்பைப் பாருங்கள். 200 மரக்கன்றுகள் நடுகிறேன் என்பதெல்லாம் பெரிய விஷயம் அல்ல. நீங்கள் அனுமதி தருகிறீர்கள்; அவர்கள் குவாரி நடத்துகிறார்கள்; அது எங்களுக்கு தேவையில்லை. லாரி 10 நிமிடம் நின்று விட்டு போகலாம் அல்லவா? சில லாரி ஓட்டுநர்கள் கைபேசியில் பேசிக்கொண்டே லாரிகளை இயக்குகின்றனர். கேட்டால் "நான் போனில் இருக்கிறேன்" என்று சொல்கிறார்கள். இந்த இடத்தில் போன் பேசுவது அவசியமா? இது குறித்து வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு பலமுறை மனுக்கள் வழங்கியுள்ளோம்; வீடியோ எடுத்து வி.ஏ.ஓ.விற்கு அனுப்பி உள்ளோம்; இருப்பினும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கவர்மெண்ட் நடத்துகிறதா? ஆட்சியர் நடத்துகிறாரா? அல்லது ஆட்சியர் பணம் வாங்கிக் கொண்டு நடத்துகிறாரா? இன்று ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும். ஏற்கனவே மனுக்கள் கொடுத்துள்ளோம்; இங்கும் பேசியுள்ளோம்; நீங்கள் அதை வாங்கி வைத்துக் கொள்கிறீர்கள்; எதுவும் நடப்பதில்லை. இப்போது முடிவு சொல்லுங்கள் – ஒன்று கல்குவாரியா, இல்லை பொதுமக்களா? கல்குவாரி நடத்தப்பட்டால்தான் அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது; நீங்கள் உங்கள் வேலையைப் பார்க்கிறீர்கள். ஒரு லாரிக்கு 60 கி.மீ. வேகம் தான்; அந்த வேகத்தில் ஓட்ட முடிந்தால் ஓட்டுங்கள். பொதுமக்களுக்கு பாதுகாப்பு வேண்டும். நான் பணம் கேட்கவில்லை; வேலை வேண்டும் என்று கேட்கவில்லை; எங்கள் ஊருக்கு சோறு போட முடியுமா? இருக்கிற விவசாயத்தை கல்குவாரியாக மாற்றிவிட்டீர்கள்; நாங்கள் எங்கு போவது? ஒன்று வேலை கொடுங்கள், இல்லையெனில் சாப்பாடு போடுங்கள். நாளொன்றுக்கு குறைந்தது 200 லாரிகள் இப்பகுதியில் வந்து செல்கின்றன. பொதுமக்கள் அனைவரும் யோசித்து செயல்பட வேண்டும். இது எங்கள் வாழ்வாதாரத்தைப் பற்றிய பிரச்சினையாகும். இனிவரும் ஐந்து

ஆண்டுகளில் திருவண்ணாமலை மாவட்டமே குவாரியால் தரைமட்டம் ஆகிவிடும் எனவே இது குறித்து ஆட்சியர் சரியான முடிவு எடுப்பார் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுவதாக தெரிவித்தார்.

5. திரு. K. தாந்தோணி, பல்லிமேட்டு நகர்:

திரு. K. தாந்தோணி அவர்கள் கூறுகையில், இத்திட்ட ஆலோசகர் விளக்கமளிக்கும் போது, தினமும் இருமுறை தண்ணீர் தெளிப்பதுடன் சாலைகளை சீரமைப்போம் என்று தெரிவித்தார். ஆனால் அவ்வாறு செய்வது மட்டும் போதுமா? என்று வினவினார். நாளொன்றுக்கு சுமார் 100 மாணவர்கள் இப்பகுதியை வழியாக பள்ளிக்கு சென்று வருகின்றனர். அவர்கள் பள்ளிக்கு செல்லும் நேரத்தில் கிரஷரை ஒரு மணி நேரமாவது நிறுத்துகிறீர்களா? என்று கேட்டார். மங்கலம் கிராமத்தில் ஒரு போகத்திற்கு சுமார் 20 ஆயிரம் டன் நெற்பயிர் விளைகிறது. இதனை அதிகாரிகள் நேரடியாக ஆய்வு செய்துள்ளனரா? என்று வினவினார். தற்போது இப்பகுதியில் கிரஷர் அமைக்கப்பட்டால் கிணறுகளில் தண்ணீர் குறைந்து விடும்; பயிர்கள் வளர்க்க முடியாது என்றும் தெரிவித்தார். "நீங்கள் அனைவரும் கிரஷர்களில் வேலை செய்ய முடியுமா? எதற்காக கிரஷர் வர வேண்டும்? 'வா' என்று சொன்னால் எதற்காக வந்தீர்கள்? விவசாய நிலங்களை விட்டுவிட்டு அங்கு சென்று வேலை செய்ய முடியுமா?" என்று கேள்வி எழுப்பினார். ஊரில் துண்டுப் பிரச்சாரம் செய்ததாக அதிகாரிகள் தெரிவித்ததாக தெரிவித்தார், செய்தார்களா? என வினாவினார்? முன்பெல்லாம் கிரஷர் இல்லை; பிள்ளைகள் அமைதியாகப் படித்தார்கள் என்றும், தற்போது இரவில் கிரஷர் இயக்கப்படுகின்றது; பகலில் லாரிகள் செல்வதால் சத்தம் ஏற்படுகிறது என்றும் குறிப்பிட்டார். இரவில் கிரஷர்கள் இயக்கப்படுவதால் பள்ளி மாணவர்கள் படிப்பதில் சிரமம் ஏற்படுகிறது என்றும் தெரிவித்தார். இந்நிலை தொடர்ந்தால் மாணவர்கள் உயர்கல்வி பெற முடியாமல், அதே கிரஷர்களில் மம்முட்டி எடுத்துக் கொண்டு வேலை செய்யும் நிலை உருவாகும் என்றும் தெரிவித்தார். இங்கு வருகை புரிந்துள்ள அதிகாரிகள்

மங்களம் கிராமத்தைச் சுற்றியுள்ள விவசாய நிலங்கள் எத்தனை உள்ளன, அவை விளைநிலங்களா? அல்லது பயன்பாட்டு நிலங்களா? என்பதனை நேரில் ஆய்வு செய்து பின்னரே அனுமதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். ஆனால் அவர்கள் அதைப் பார்ப்பதில்லை; எங்கோ ஒரு சர்வே நம்பர் குறிப்பிடுகின்றனர்; கருத்துக் கேட்பு கூட்டம் நடத்துகின்றனர் என்றும் தெரிவித்தார். உங்களின் வருங்கால சந்ததியினர் இங்குதான் வாழ வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, ஒருமித்தமாக "குவாரி வேண்டாம்" என உங்கள் எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என்றும் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

6. திருமதி. சாந்தா, மங்கலத்து மேடு:

திருமதி. சாந்தா அவர்கள் கூறுகையில், எங்களுக்கு அதிக அளவில் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது என்று தெரிவித்தார். மூன்று பக்கங்களிலும் லாரிகள் வந்து செல்கின்றன; இரவில் நிம்மதியாக உறங்க முடியாத நிலை உள்ளது என்றும் குறிப்பிட்டார். எங்கள் வீட்டில் சிறு குழந்தைகள் உள்ளனர்; வாய் பேச முடியாத இரண்டு குழந்தைகளும் உள்ளனர்; அவர்கள் கூட தூங்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் என்றும் தெரிவித்தார். இரவு முழுவதும் லாரிகள் தொடர்ந்து வந்து செல்கின்றன; இந்நிலையில் எவ்வாறு வாழ்வது என்று வினவினார். தண்ணீர் முறையாக தெளிக்கப்படுவதில்லை; தூசி அதிகமாக பரவி பறக்கிறது என்று கூறினார். எனவே, அதிகாரிகள் எங்கள் வீடுகளை நேரில் பார்வையிட்ட பின்னரே அனுமதி வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், லாரி ஓட்டுநர்கள் வாகனங்களை முறையாக இயக்குவதில்லை; அவர்கள் அதிக வேகத்தில் மற்றும் கைபேசியில் பேசிக் கொண்டும், பல் துலக்கி கொண்டும் லாரிகளை இயக்குகின்றனர் என்றும் தெரிவித்தார். சாலையில் குழந்தைகள் சென்றாலும் கவனிக்காமல் செல்கின்றனர் என்றும் கூறினார். இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு சிறு குழந்தையை மேலே ஏற்றிச் செல்லும் வகையில் ஒரு லாரி ஓட்டுநர் வாகனம் ஓட்டிச் சென்றதாகவும், தாம் கத்தினாலும் அவர்கள்

கவனிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். எனவே, அதிகாரிகள் எங்கள் ஊருக்கு நேரில் வந்து நிலைமையை ஆய்வு செய்த பின்னரே அனுமதி வழங்க வேண்டும் என்றும், மேலும் லாரிகளின் வேகத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அதன் பின்னர், பொதுமக்கள் தரப்பில் இருந்து கருத்து தெரிவிக்க யாரும் முன்வரவில்லை.

பொது மக்கள் தொடர்ந்து கருத்துக்களை தெரிவிக்க முன் வராததால் சார் ஆட்சியர், செய்யாறு கோட்டம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தினை நிறைவுசெய்திட கூறியதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். MSH புளூ மெட்டல், சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாக 23 மனுக்கள் பெறப்பட்டுள்ளது, மின்னஞ்சல் மூலமாகவும் மற்றும் நேரடியாகவும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை, அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

A. Jothimanickam 6/3/26
மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

6/3/26
சார் ஆட்சியர்,
செய்யாறு கோட்டம்,
திருவண்ணாமலை.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
திருவண்ணாமலை.